பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 24 வியாழக்கிழமை (11.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 315

## விடுதலைப் புலிகளைச் சந்திக்க முடியவில்லையே; லூயிஸ் ஆர்பர் அம்மையார் பெரும் ஆதங்கம்!



கொழும்பு,ஒக்.11

விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்க ஆவலாக இருந்தேன். துரதிஷ்டவசமாக அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விட்டது.

இலங்கை வந்துள்ள ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான தூதர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் இப்படிக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினரைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தனது ஆதங்கத்தையும் கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு வருமாறு ஆர்பருக்கு அழைப்பு

கொழும்பு, ஒக். 11

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் தமது பகுதிக்கும் வருகை தர வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமை விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி தெரிவித்தவையாவது:-

ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் நிகழ்த்தப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்து உரிய மதிப்பீடு

(08 ஆம் பக்கம் பார்க்க)

### அரசு மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

# மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த ஐ.நா. கண்காணிப்பகம் அத்தியாவசியம்

## ஆர்பர் அம்மையாரிடம் தூதுக்குழு வலியுறுத்து

கொழும்பு,ஒக்ரோபர் 11

தமிழர் பிரதேசங்களில் பல்கிப் பெருகி, மலிந்து போயுள்ள மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

ஆகையால், இந்த நாட்டில் மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தனது கண்காணிப்பகம் ஒன்றை நிறுவுவது உடனடித் தேவை; அத்தியாவசியமானது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்கடத்தல்கள், கொலைகள் தொடர்பாக அச்சமின்றி மக்கள் முறைப்பாடு செய்யலாம்

### யாழ். நகரத் தளபதி மக்கள் குழுவிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

ஆள்கடத்தல்கள், கொலைகள், தொலைபேசியில் மிரட்டல் போன்ற சிவில் வாழ்வைப் பாதிக்கும் சம்பவங்கள் தொடர்பாக மக்கள் அச்சமின்றிப் படையினரிடம் முறைப்பாடு செய்யலாம். சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். நகரத்தளபதி பிரிகேடியர் ஜே.ஆர். குலதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்தபோதே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

மக்கள் குழுவின் செயலாளர் ஸ்.பரம

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு நிலைமைகள் குறித்து சிவில் சமூகத்துடன் ஆர்பர் ஆராய்வார்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். குடாநாட்டில் தற்போதைய நிலைவரம் தொடர்பாக யாழ். பிரஜைகள் அமைப்புகளை ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நாளை முற்பகல் 11.30 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெறும்.

முதலில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தைச் சந்திக்கும் ஆர்பர், அதன் பின்னர் யாழ். பிரஜைகள் சார்பில் பிரமுகர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இறைமையைக் கூறி தமிழரின் உரிமைகளை அடியோடு ஒழிக்க முயல்கிறது அரசு!

### சபையில் சம்பந்தன் சாடல்

கொழும்பு, ஒக்.11

நாட்டின் இறைமையைப் பற்றிக் கூறிக்கொண்டு, தமிழ் மக்களின் உரிமையை அடியோடு ஒழிப்பதற்கு இந்த அரசு முயல்கின்றது. உண்மையான இறைமையுள்ளஅரசுக்கு இது உகந்ததல்ல.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் சீற்றத்துடன் தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன். ''குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்'' சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச சமவாயத்தில் உள்ள - தனக்கு சாதகமான விடயங்களை மாத்திரம் பயன்படுத்திக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை விரிவுரையாளர் பம்பலப்பிட்டியில் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஒக். 11

கொழும்பில் வைத்துக் காணாமல் போனார் எனக் கூறப்பட்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.மகினன் (வயது- 60) பம்பலப்பிட்டி கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பம்பலப்பிட்டி கடற்கரையில் சடலம் ஒன்று கரையொதுங்கியபோதும் அதனை அடையாளம் காண்பதில் இழுத்தடிப்பு நிலைமை நீடித்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த விரிவுரையாளரின் மனைவி தமது கணவனின் சடலத்தை நேற்று அடையாளம் கண்டு உறுதிப்படுத்தினார் எனப் பொலிஸ் தரப்புத் தெரிவித்துள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுக்குச் சலுகை வழங்க உத்தரவு

கொழும்பு, ஒக். 11

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஜனாதிபதி சிறப்புரிமை சட்டத்துக்கு அமைவாக சகல பாதுகாப்பு மற்றும் சலுகைகளையும் வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியான தமக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு, அலுவலக செலவு மற்றும் வாகன வசதி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் இருப்போர் தாக்கப்பட்டனர்; எனினும் போராட்டம் தொடரும் என அறிவிப்பு

கொழும்பு,ஒக்.11

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ்க் கைதிகள் மீது சிங்களக் கைதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

சிறையில் உள்ள சிங்களக் கைதிகளும், சிறைக்காவலர் ஒருவரும் இணைந்தே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பரை சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்து தரும்படி கோரி இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறை உயர் அதிகாரி ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை உடனடியாகக் கைவிடுமாறும், இல்லையேல் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் கடுந்தொனியில் மிரட்டியுள்ளார் என்று கைதிகள் கூறினர்.

வெலிக்கடை சிறையின் 'ஜி' பிரிவு சிறைக்கூடத்திற்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 86 தமிழர்கள் நேற்று காலை 6 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர்

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சேவை நயந்து வாழ்த்துகின்றோம்

யா/மயிலிட்டி வடக்கு
கலைமகள் மகா வித்தியாலயத்தில்
04.01.2002 தொடக்கம் ஆசிரியராகக் கடமையாற்றி நேற்று
(10.10.2007)
அகவை அறுபதில் ஓய்வு பெற்றுச் சென்ற எமது ஆசிரியர்

### செல்வி இராஜேஸ்வரி நாகமுத்து

அவர்களின் சேவையினைப் பாராட்டி ஓய்வு காலம்
சிறப்பாக அமைந்து சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

*யா/மயிலிட்டி வடக்கு,*
*கலைமகள் ம.வி.,*
*காங்கேசன் துறை.* (66820)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

---

யாழ்.திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். திருநெல்வேலி றோ.க்.த.க.பாடசாலையில்
*2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்*
*சித்தியடைந்த மாணவர்களான*



**சி.றஜித்தா**
*154 புள்ளிகள்*



**ந.தனுஜன்**
*148 புள்ளிகள்*

வெட்டுப் புள்ளியை அண்மித்த மாணவர்களான

*01. அ.அனிக்கா 131 புள்ளிகள்*
*02. சி.சரணியா 129 புள்ளிகள்*
*03. அ.றோகினி 126 புள்ளி*
*04. த.விஜிதரன் 125 புள்*
*05 [illegible] தன் 124 புள்ளிகள்*
*110புள்ளிகள்*
*108புள்ளிகள்*

மேற்படி மாணவர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவது ன் அவர்களை நல்வழி படுத்திய வகுப்பாசிரியை திருமதி பா.கண்ண தாசன், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

(66813) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 இல் 158 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும்*

### செல்வன் வரதகுலசிங்கம் லக்ஷயன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல சாதனைகள் புரிந்து சீரும் சிறப்பும் பெற்று வாழ நாவலம்பதி காட்டு மாவைக் கந்தன் அருள் வேண்டுவதுடன் அவரை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அம்மா, அப்பா, அக்கா, தம்பி,
அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்
குடும்பம், அத்தைமார் குடும்பம்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (66323)

---


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

923 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு

05 12 22 52

09-10-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4347157-4362638

ஜக்பொட் பரிசு ரூபா.1,765,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 342,883 | 10/- | 3,428,830/- |
| 2 இலக்கங்கள் | 31,414 | 20/- | 628,280/- |
| 1 இல. + லக்கினம் | 31,020 | 30/- | 930,600/- |
| 2 இல. + லக்கினம் | 2,903 | 100/- | 290,300/- |
| 3 இலக்கங்கள் | 825 | 500/- | 412,500/- |
| 3 இல. + லக்கினம் | 85 | 5,000/- | 425,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,765,000/- | 1,765,000/ |
| மொத்தம் | | | 8, 280,510/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 409,140 | | 9,304,010/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5237319 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஒக்டோபர் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 4354513-0-02 |
| அம்பாறை | 4352897-1-23 |
| ஹம்பாந்தோட்டை | 4351106-4-32 |
| கண்டி | 4357814-8-21 |
| பதுளை | 4352590-5-85 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


---

## காரைநகரில் நாளை முதியோர் தின நிகழ்வு

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணி மனை நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழாவும் எழுத்தறிவுதினவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பணி மனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையா ளர் கலாநிதி எஸ். திருநாவுக்கரசு கலந்து கொள்ள உள்ளார்.

இவ்விழாவில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதிய வர்கள் கௌரவிக்கப்பட உள்ளதுடன் சிறு வர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக் கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

உலகதரிசனம் அமைப்பு, நல்லூர் லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இவ்விழா நடைபெறுகிறது. (1-250)

---

### உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

நல்லூர் திருவிழாவின் போது கைமாறிய சைக்கிள் எம்மிடம். உரியவர் ஆதாரத்துடனும் திறப்புடனும் வந்து பெற்றுக்கொள்ளவும். 431, கோயில் வீதி, நல்லூர்.

---

## தேவை

ஸ்ருடியோ ஒன்றிற்கு
Video Editing, Photoshop, Video Filming, Photography, Chshier
தெரிந்த அல்லது பழக விரும்பும்
இருபாலாரும் நேரில்
தொடர்பு கொள்ளவும்.
**இல.309, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.** (66822)

---

## தேவை

**நியூ தாஸ் வீடியோ ஓடியோ றெக்கோடிங் பார் அன் கொம்பியூட்டர் பிறிண்டிங் ரைப்பிங்**

கணனி வேலையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளை தேவை. 18.10.2007 இற்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : **வரதன் றெக்கோடிங் சென்ரர்** இணுவில் ஆஸ்பத்திரியடி. தொ.பே. 0777141391

---

## இதய அஞ்சலிகள்

*விஞ்ஞான கணித புள்ளிவிவரவியல்*
*துறையின் முன்னாள் தலைவரும்*
*தற்போதைய சிரேஷ்ட*
*விரிவுரையாளருமான*

### P.மகினன்

அவர்களின் திடீர் மறைவையொட்டி
அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும்
அடைகின்றோம்.
அன்னாரை இழந்து தவிக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

விஞ்ஞானபீட மாணவர்
ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம். (66834)

---

## போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

### பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம்
போதனா வைத்தியசாலையில்
பாவித்த கீழ்க்காணும் பொருள்கள்
24.10.2007 அன்று மு.ப. 9 மணிக்கு
ஏலத்தில் விற்கப்படும்.

01) பாவித்த இரும்புக் கட்டில்கள்
02) பாவித்த வீல் செயார்ஸ் (Wheel Chairs)
03) பாவித்த ஸ்ரீல் கபினெற்
04) பாவித்த மர அலுமாரி
05) பாவித்த லொக்கர் பெட்டிகள்
06) பாவித்த குளிர்சாதனப் பெட்டி
07) பாவித்த பற்றரிகள்
08) பாவித்த ரயர்கள்
09) பாவித்த அலுமினியச் சமையல் பாத்திரங்கள்
10) பாவித்த சத்திரசிகிச்சை உபகரணங்கள்

அத்துடன் மேலும் சில பொருள்கள்.
ஏலத்தில் எடுப்பவர்கள்
காரியாலயத்தில் உடன் பணம்
செலுத்தி அன்றே பொருள்களை
எடுத்துச் செல்லவேண்டும்.

**Dr.A.E.ஞானஜோதி**
*பணிப்பாளர்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (அ/239941)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த
பெறுபேறுகள் பெற்று சித்தி அடைந்த மாணவர்களான



**கணேசலிங்கம் பிரசாந்த்**
(புள்ளி-162)



**லௌசியா சுந்தர்**
(புள்ளி-155)

ஆகியோரை கல்வியில் மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துவடன் அவர்களுக்கு ஊக்கம் அளித்து சித்திக்கு வழி வகுத்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் மன தார வாழ்த்துகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண
மகா வித்தியாலயம்.
(66825)

---

## கண்ணீர் அஞ்சலி

*மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர்*
**ச.சிவனேஸ்வரன்** *அவர்களின் அன்புத் தாயார்*

### திருமதி சரஸ்வதி சம்பந்தசரணாலயம்

*அவர்களின் மறைவினால் துயருறும்*
*குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத்*
*தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
அதிபர்கள், சண்டிலிப்பாய்க் கோட்டம். (66324)

---

## முதலாவது ஆண்டு திவச அழைப்பு



**23.09.2006 நவராத்திரி அன்று**
**சிவபதமெய்திய குடும்பத் தலைவர்**
அமரர்

### கனகரத்தினம் புவனேஸ்வரன்

**(சின்னராசா)**
(உரிமையாளர், காளி அம்மன் மர அரிவு ஆலை)

அவர்களது முதலாம் ஆண்டு திவச வீட்டுக்கிருத்தியம் இன்று (11.10.2007) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடை பெற வுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*காளி அம்மன் மர அரிவு ஆலை,*
*மாதா கோவிலடி,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (66821)

பு.யோகராணி (மனைவி-இந்தியா),
பு.கேதீஸ், பு.மயூரன் (மகன்மார்),
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்தம்பி வினாசித்தம்பி

*(ஓய்வுபெற்ற கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்)*

கோப்பாய் வாராம்பற்றையைப் பிறப் பிட மாகவும், நீர்வேலி மத்தியை வசிப்பிடமா கவும் கொண்ட சின்னத்தம்பி - வினாசித் தம்பி நேற்று (10.10.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதி யினரின் அன்பு மகனும், அமரர்கள் நடராசா - தங்கம்மா தம் பதியினரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கண வரும் சத்தியா, சத்தியசீலன், சுமித்திரா (ஜேர்மனி), குகசீலன் (OES) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனந்தனின் (ஜேர் மனி) அன்பு மாமனாரும் திலானி, சின்டியா (ஜேர்மனி) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (11.10.2007) வியாழக் கிழமை மு.பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.* (66832)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி செல்லத்துரை மீனாட்சியம்மா

தம்பிவளவு, பத்தானை, அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப் பிடமாகக் கொண்ட திருமதி.செல்லத்துரை மீனாட்சியம்மா நேற்று (10.10.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை (வைத்தியர்) - வள்ளி யம்மை தம்பதியினரின் மகளும் செல்வராஜா (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா), ஜெயானந்தம் (சின்னராஜா ஜெயா இன்டஸ் றியல்-மாலுசந்தி), சாந்தகுமார் (ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), இராஜேஸ்வரி, கமலேஸ் வரி (கனடா), ஆகியோரின் தாயாரும், பத்மாசினி, காலஞ்சென்ற மனோன்மணிதேவி, இராசாத்தி, வளர்மதி, கலைச்சந்திரன், ஆகி யோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2007) வியா ழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக னக் கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.ஜெயானந்தம் (சின்னராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களில் கைக்கொள்ளும் பஞ்சாங்கங்களின்படி நவராத்திரி பூசை செய்ய முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.11

ஆலயங்களில் கைக்கொள்ளப்படும் பஞ்சாங்கங்களின்படி நவராத்திரி பூசையை ஆலயங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய செயலாளர் யோ.பிரபாகரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஒன்றியத்தில் கடந்த முதலாம் திகதி நடத்தப்பட்ட மாதாந்த கருத்தரங்கில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (203)



யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் யாழ்.பிரதேச உதவிச் செயலர் மரியதாஸ் ஜெகூ, சட்டத்தரணி இ.திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றுவதையும்,ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தையும் பெற்ற மதுஷனுக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி வங்கிப்புத்தகத்தைக் கையளிப்பதையும் அருகில் சிறுவனின் தாயார் நிற்பதையும் சிறுவர்களின் நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள் - லக்ஸ்மன்.

## வெளிநாடுகளுக்கான விரைவு தபால் சேவை

நல்லூர்,ஒக்.11

யாழ்.பிரதம தபாலகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெளிநாடுகளுக்கான விரைவு தபால் சேவையை (ஈ.எம்.எஸ்) ஆரம்பித்துள்ளது.

இந்தச் சேவை மூலம் பொதுமக்கள் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர், நண்பர்களுக்கு அனுப்பிவைக்கும் கடிதங்கள் வழமையிலும் பார்க்க மிகவும் குறுகிய நாள்களில் உரியவர்களுக்குச் சென்றடையும்.

கடிதங்களுடன் முக்கிய ஆவணங்களையும் இந்தச் சேவையூடாக உலகின் எப்பகுதிக்கும் மிகவும் விரைவாகக் கிடைக்கக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வி.குமரகுருவின் முயற்சியால் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மிகவும் குறைந்த கட்டணமே இதற்கு அறவிடப்படும் என்றும் பிரதம தபாலதிபர் கே.துரைசிங்கம் தெரிவித்தார். (203-111)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு :-

**சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி**

கா.கஜனி (159), செ.கஸ்தூரி (154), ச.நிர்மலன் (144).

**மானிப்பாய் மெமோறியல்**

வி.கயல்விழி (162), ஜெ.நிதுர்சன் (160), சு.டயானி (156), ப.கஜகோகுலன் (151), ஜெ.அகிலா (149), ச.சுலோசனா (148).

**அளவெட்டி அருணாசலம் வித்தி.**

ர.ஐங்கரன் (163), ஸ்ரீ. சாலினி (149).

**சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை**

ர.பானுப்பிரியன் (162), க.தமிழினி (162), ப.கஸ்மிலா (150), ஞா.விக்னேஸ் (144), ம.ஆத்மீகா (142).

**கைதடி விக்னேஸ்வரா வித்தி.**

நா.தர்சிகா (155), த.தேவகுமார் (145), மு.பிரகாஸ் (140).

**கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை**

பு.ஜதுசன் (152), கு.சிந்தூரியா (146), சி.நிதர்சனா (141).

**அல்லாரை அ.த.க.பாடசாலை**

தை.நிருஜா (149), இ.அர்ச்சனா (140), ச.யபோசன் (140).

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

அ.தேனுஜா (149), த.அகல்யா (142).

**உசன் இராமநாதன் ம.வி.**

சி.மதுரிகன் (161), அ.ஜெனீசன் (146).

## சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி அனுஷ்டிக்கவுள்ளனர்.

சங்கத்தானையில் உள்ள கழகத்தின் தொழிற்பயிற்சி நிலைய மண்டபத்தில் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச விழிப்புலன் இழந்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விழிப்புலன் இழந்தவர்கள் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு வெள்ளைப் பிரம்புகள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (203 - 207)

## குடத்தனைப் பகுதியில் நெல் விதைப்பு ஆரம்பம் கட்டாக்காலிகளைக் கட்டி வளர்க்கக் கோரிக்கை

கட்டைவேலி,ஒக்.11

குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்கள் ஒன்றிணைந்து கால்நடை வளர்ப்போரை வேண்டியுள்ளன.

தற்போது குடத்தனைப் பகுதி வயல் நிலங்கள் நெல் விதைப்பு முடிவடைந்துள்ளன. அடுத்து அம்பன் பகுதியில் நெல்விதைப்பு ஆரம்பமாகவுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு ஆடு, மாடுகளைக் கட்டாக்காலிகளாக மேய்ச்சலுக்கு வயல் நிலங்களுக்குச் செல்லவிடாமல் அவற்றைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் -

இல்லையேல் கட்டாக்காலி ஆடு, மாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் -என இப்பகுதி விவசாய சம்மேளனங்கள் கால்நடை வளர்ப்போருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன. (203-160)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை மாதாந்த ஞானச்சுடர் மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளையும் மதிப்புரையை சொல்வேந்தன் பொன் சுகந்தனும் நிகழ்த்துவர். (203)

* * *

நாவற்குழி,ஒக்.11

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச முதியோர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (288)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் செயற்குழு பரப்புரைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையிலான பரப்புரைக்குழு இந்நிகழ்வில் கலந்து கொள்ளும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கலைவட்டத்தின் கருத்தரங்குத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கருத்தரங்கு கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

'மேற்கத்தைய - சமஸ்கிருத தமிழ் காவியங்கள் - ஓர் ஒப்பீட்டு நோக்கு' என்னும் தலைப்பில் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன் கருத்துரை வழங்குவார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் சண்டிலிப்பாய், சங்கானை கோட்டப் பாடசாலைகளும் இணைந்து நடத்தும் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி க.தெய் வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203-100)

## 15 வயது சிறுவனின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு உதவுங்கள்!



இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் 15 வயதுச் சிறுவனின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு வறுமை நிலையில் உள்ள அவரது பெற்றோர் நன்கொடையாளர்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளிடம் இருந்து நிதி உதவியினைக் கோரியுள்ளனர்.

பத்தாவத்தை, இளவாலையைச் சொந்த இடமாகக் கொண்ட செபஸ்ரியன் அருள்யோதீஸ்வரன் (வயது -15) என்ற சிறுவர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 10 ஆம் தர மாணவனாவார். இவர் தனது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் 8 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்றுத் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இவருக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மேற்கொள்வதற்கு 12 லட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது தந்தையார் ஒரு கையை இழந்து மிகவும் வறுமையான நிலையில் எவ்வித நிதி வசதியும் இல்லாத நிலையில் உள்ளார்.

இதனால் தனது மகனுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சையை மேற்கொள்வதற்கு நன்கொடையாளிகள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்கள் ஆகியவற்றிடம் இருந்து நிதியுதவியை அவர் எதிர்பார்க்கிறார்.

எனவே இந்த மாணவனது எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் தமது நிதி உதவியை ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். கிளையில் 02-3185401-1 என்ற கணக்கு இலக்கத்துக்கு வழங்குமாறு கேட்டுள்ளார்.




ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக் கிளையின் 3 ஆவது பிறந்த தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் கிளை முகாமையாளர் ப.சங்கர் 'கேக்' வெட்டுவதைப் படத்தில் காணலாம். அருகில் வங்கியாளர்களும் காணப்படுகின்றனர்.

# வயோதிப மாதுவின் சடலம் எரியுண்ட நிலையில் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

தீயில் எரிந்து மரணமானதாகத் தெரிவித்து வயோதிப மாது ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மல்லாகத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தாயான பத்மநாதன் சாரதா தேவி(வயது - 60) என்ற பெண்மணியே கடந்த திங்கட்கிழமை தனது வீட்டு முற்றத்தில் இருந்த விறகுக் கட்டுகளுடன் சேர்ந்து எரியுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த பெண்மணியின் வீட்டில் இருந்து மாலை 5 மணியளவில் ஒரு வித துர்நாற்றம் வருவதை அவதானித்த அயலவர்கள் அங்கு சென்று பார்த்தபோது அவர் வீட்டு முற்றத்தில் இருந்த விறகுக் கட்டுக்களுடன் சேர்த்து எரியுண்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெல்லிப்பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (50 - 68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகின்றோம்



2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/ நாவற்குழி ம.வித்தியாலய மாணவி

**அபிராமி சுரேஸ்கரன்**

கல்வியில் மேலும் சிறந்து விளங்கிடவும் மற்றும் அவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர்கள்:*
அப்பப்பா, அப்பம்மா, அத்தை, அக்கா, தம்பிமார்.

*நாவற்குழி கிழக்கு, கைதடி.* (66706)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கரணவாய் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 2007 தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி

**செல்வி சின்னத்துரை சிந்துஜா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் முன்னேறி பல சாதனைகளைப் படைக்க வேண்டும் எனவும் அதிபர் ஆசிரியர்களின் தியாகம் மிக்க சேவையை நினைத்து பாராட்டி வாழ்த்துகிறோம்

*வாழ்த்துவோர்:*
தாத்தா, அப்பப்பா *(குடும்பத்தினர்)*, அம்மம்மா, அப்பா *(பிரான்ஸ்)*, அம்மா, தம்பி, தங்கை, பெரியப்பா, சித்தப்பா, மாமி, பெரியம்மா *(லண்டன்)*, சின்னம்மா *(சுவிஸ்)*.

*"முல்லை" கரணவாய் தெற்கு, கரவெட்டி.* (66734)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நீர்வேலி உப அஞ்சல் அலுவலகத்திலும், கோப்பாய் அஞ்சல் அலுவலகத்திலும் அஞ்சலராகக் கடமையாற்றி தனது 55 ஆவது வயதில் ஓய்வு பெற்றுச் செல்லும்

**குழந்தைவேலு சுப்பிரமணியம்**

அவர்கள் தனது ஓய்வு காலத்தில் சகல செல்வங்களையும் பெற்றுச் சிறப்பாக வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**அஞ்சல் சமூகத்தினர்**
**கோப்பாய், நீர்வேலி, கோப்பாய் வடக்கு, அச்செழு.**

(66704)

யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை
2007 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரை

## மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | |
|---|---|
| படி.ஜெனார்த்தன் | -163 |
| யோ. சுஜிவதனி | -148 |
| சி.கஜராம் | -147 |
| ஸ்ரீ. லுதர்சன் | -147 |

**நூறுக்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றோர் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| ஈ. தவீந்தா | -136 | த. அனுஸ்ற்ரா | -134 |
| ப. டிலக்சன் | -133 | ஸ்ரீ. கஜானி | -122 |
| ஸ்ரீ. லக்சயன் | -121 | பி. மோகனப்பிரியன் | -119 |
| உ. செந்துாரன் | -114 | ஆ. குருபரன் | -114 |
| பா. கோபிகன் | -103 | க. நிஜானா | -103 |
| ந. நிருஜன் | -101 | | |

**2006 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரையும் வாழ்த்துகின்றோம்**

| | |
|---|---|
| ச.சியாமிலா | -165 |
| ற.விதுர்ஜன் | -134 |

**நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம்**

| | |
|---|---|
| வ. சர்மினி | -129 |
| இ. விதுசன் | -128 |
| ஜெ. தர்சன் | -124 |
| தெ. ரஜிஷ்ரன் | -123 |
| ந. கிருஷன் | -115 |
| த. காவேரி | -103 |
| ம. யோன்சி | -103 |
| ச. கபிலன் | -100 |

*வாழ்த்துவோர்:*
**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

(சி.53923)

# மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த**



செல்வி சி.சிவாம்பிகை 151



செல்வன் ப.நிறோஸ்குமார் 150



செல்வி ச.பிந்துஷா 144



செல்வி லோ.பிரியதர்சினி 143

ஆகிய மாணவர்களைப் பாராட்டிவாழ்த்துவதுடன் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் இவர்களின் வெற்றிக்கு உறுதுணைபுரிந்த அதிபரையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.

(66737)

[illegible]

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே கப்பல் பிரயாணத்தின் போது கறுப்பு நிற ரவலிங் பாக் ஒன்று 01.10.2007 அன்று தெல்லிப்பழையில் தவறவிடப் பட்டுள்ளது. இதற்குள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P:- 077 6128184, 077 6560945. [illegible]


# விற்பனைக்கு

**DIGITAL PHOTOCOPY MACHINE**

*போட்டோ கொப்பி மெசின்*



SHARP - AR5316
TONNER - AR016 ST
DRUM - AR- 5316

**தொடர்பு:**
**021-4591064, 077-4121261**


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்ற யா/ நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை மாணவி

**செல்வி ச.தர்சிகா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர்வுகள் பெற்றுக் கல்வியிலும் பண்பிலும் சிறந்து விளங்க அன்புடன் வாழ்த்துகின்றோம்.

யா/நீர்வேலி தெற்கு, இ.த.க.பாடசாலை. **அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(66819)

# கண்ணீர் அஞ்சலி



*எமது நிறுவனத்தில் பணிபுரியும் சி.குகதர்சினி அவர்களின் அன்புத் தந்தை*
**சரவணமுத்து சின்னத்துரை**
*09.10.2007 அன்று காலமாகிவிட்டார்.*

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

40, நக்கா லேன், சுண்டிக்குளி. (66818)

**சிறுவர் உளசமூகத் திட்டம், சாந்திகம்.**

## பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் தண்ணீர்த் தொட்டி அமைப்பு

நவாலி, ஒக்.11

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நீர் விநியோகத் திற்கான தண்ணீர்த் தொட்டியொன்றும் அலுவலக அறையொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக அப்பாடசாலை அதிபர் சிவகடாட்சம் தெரிவித்துள்ளார். (203-100)

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு இரண்டாம் கட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவ உதவியாளர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிநெறி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

உள்ளூராட்சி மன்றத்தின் ஊடாக மக்களுக்கு முழுமையான சேவைகளை வழங்குவது தொடர்பான இப்பயிற்சிநெறி நாளை வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளுக்கு குடாநட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் இருந்து 30 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பயிற்சிகள் யாழ்.கண்டி வீதியிலுள்ள ஜி.ரி.இசற் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. (95)

## மின்கம்பத்துடன் மோதிய மினிபஸ்

வேகமாக வந்த தனியார் மினிபஸ் வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியதில் மின்கம்பம் சேதமடைந்தது. தெய்வாதீனமாக பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கைதடிப் பாலத்திற்கு அண் [illegible] இடம்பெற்றது. (203-207)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

செல்வன்
**சதானந்தன் திருமாலன்**

அவர்களைப் மனதாரப் பாராட்டிக் கல்வியில் மேலும் பல சிறப்புகளைப் பெற்று வாழ வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அம்மம்மா, தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார் மற்றும் உறவினர்கள்.

*இல.11, திருவள்ளுவர் லேன், அரசடி வீதி, கந்தர்மடம்.* (66807)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யா/போக்கட்டி அ.த.க.பாடசாலையில் 2007 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த*

செல்வி
**தங்கவேல் குணவதனி**

*அவர்களையும்*

**மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான**

செல்வி கமலேஸ்வரன் புவிதா
செல்வி பரிமேலழகன் சுபேந்தி
செல்வன் அசோகலிங்கம் ஜான்சன்

*ஆகிய அனைவரையும் உளமாரப் பாராட்டி கல்வியில் மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.*

**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம்.**

(சி.53932)

# கண்ணீர் அஞ்சலி



**யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய**

புஸ்ஷஅங் வேலுப்பிள்ளை விநாயக மூர்த்தி

[illegible]

**வேலுப்பிள்ளை தில்லைநாயகி**

[illegible]

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம்.**

(66805)

# மரண அறிவித்தல்

## குழந்தைவேலு சிவஞானம்

**(பலுகாடு, காரைநகர்)**

பலுகாடு, காரைநகரைச் சேர்ந்த குழந்தைவேலு சிவஞானம் (முன்னாள் உரிமையாளர், சிவஞானம் ஸ்டோர்ஸ்) 09.10.2007 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவநேசன், குகநேசன், குலமகள், சண்முகநேசன், ஜெயநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிமலரூபி, கஸ்தூரி, அருட்குமார், சிவரஞ்சினி, சுகந்தினி, ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீனா, அஸ்வின், அஸ்வினா, ஐஸ்வர்யா, பிரணவ், தேனுஜன், ஜனனி ஆகியோரின் அன்புப் பாட்டனும் சரஸ்வதி, சிவப்பிரகாசம், சௌந்தரம், கமலாதேவி, தவமணிதேவி, இராமச்சந்திரன், இராசலிங்கம், இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகரெத்தினம், திருவாதிரை, கணேசமூர்த்தி (ஸ்ரீ திருப்பதி, (P.V.T) LTD கொழும்பு), புவனேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற செல்லத்துரை, மகேஸ்வரி மற்றும் சிவப்பிரகாசம் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் பரஞ்சோதி, செல்வராணி, பரமேஸ்வரி, நடராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் லோகாம்பிகை, இரட்ணேஸ்வரி, இராஜேஸ்வரி, குகதாசன் ஆகியோரின் அன்புமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.10.2007) வியாழன் காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை பொரளை ஜெயரட்ணமலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை 12.10.2007 வெள்ளி காலை 7.30 மணியளவில் ஜெயரட்ணமலர்ச்சாலையில் கிரியைகள் ஆரம்பமாகி காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*தகவல்:*
இ.நாகரத்தினம் *(சண்முகநாதன் ஸ்ரோர்ஸ், தாவடி)*,
இ.திருவாதிரை *(ஸ்ரீ திருப்பதி P.V.T (LTD) கொழும்பு)*,
இ.கணேசமூர்த்தி *(ஸ்ரீ திருப்பதி P.V.T (LTD) கொழும்பு)*.
*(மைத்துனர்கள்)*.

*96 1/2, வாசல றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு- 11.*
*தொ.பே.: 2393099*

(66811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்பர் அம்மையாரைச் சந்திப்பதற்கு

# படையினரின் தலையீடு இல்லாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளக் கேட்கிறார் எம்.பி

யாழ்ப்பாணம்,ஒக்.11

காணாமல் போனவர்களது உறவினர்களின் சந்திப்புக்கு படையினர், பொலிஸார் ஆயுதக்குழுக்களது தலையீடு இல்லாது இருப்பதை ஐ.நா.உயர் அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சந்திரகாந்தன் இலங்கையின் மனித உரிமைகள் விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்களின் துயர் துடைக்கும் மனிதா பிமானப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஐ.நாவின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான தூதுவர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் விஜயத்தின் போது, அவரது நிகழ்ச்சி நிரலுக்கு அழுத்தங்களைக் கொடுக்காது, அவரை சந்தித்து காணாமற்போனோரின் உறவினர்கள் தத்தமது ஆதங்கங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து, இன்னமும் வெளிச்சத்திற்குவராத மனித உரிமை மீறல்கள் வெளிப்படுத்தப்படுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுங்கள்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமைமீறல் சம்பவங்கள் குறித்து நம்பகரமான அறிக்கைகளை சர்வதேசம் தகுந்த ஆதாரங்களுடன் அரசுக்கு காலத்துக்கு காலம் சுட்டிக் காட்டியும், அதனை புரியாதது போல நடிப்பதுதான் இங்கு வேடிக்கையான விடயம்.

பலவந்தமான ஆட்கடத்தல்கள், கொலைகள், காணாமல் போதல் கப்பம் கோரல் சம்பவங்கள் போன்ற மனித உரிமை மீறல்கள் அரசின் ஆசீர்வாதத்துடன் செயற்படும் ஆயுதக் குழுக்களாலும், புலனாய்வுக் குழுக்களாலும் மேற்கொள்ளப்படுவது எவராலும் மறுதலிக்க முடியாததொன்று.

அம்மையாரின் வருகை பத்தோடு பதினொன்றாக அமையாமல் காத்திரமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைய வேண்டும். மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்பதற்கு நிரந்தரமான கண்காணிப்பு நிலையம் ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்கான அடித்தளமாக அம்மையாரின் விஜயம் அமைவதுடன், இதுவரை வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படாத பெரும்பாலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் வெளிப்படுத்தப்படுவதன் மூலமும் இவ் விஜயம் ஆக்கபூர்வமாக அமைவதற்கு வழி சமைக்கும்.

நெருக்கமான சூழல் ஒன்றில் அமையும் அம்மையாரின் விஜயமானது ஆக்கபூர்வமானதாக அமையவேண்டும். அத்துடன் வடக்கு, கிழக்கில் வாழும் காணாமல் போனவர்களின் உறவினர்கள், ஆர்பர் அம்மையாரை சந்திப்பதற்கு அரசு உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்கவேண்டும். இல்லாவிடின் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான ஆதங்கங்களை அவர் ஒட்டுமொத்தமாகவே புரியாத சூழலைத் தோற்றுவித்துவிடும். (சி)

## கட்டுவன் காவலரணை படம் எடுத்தார் எனக் கூறி ஒருவர் கைதானார்

பலாலி இராணுவ முகாமின் நுளைவாயிலான கட்டுவன் காவலரணைப்படம் பிடித்தவர் என கூறப்படும் ஒருவர் மல்லாகம் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, வேப்பம்குளத்தைச் சேர்ந்த சலாம் முகமட் றுக்சான் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு செல்வதற்காக கட்டுவன் காவலரனுக்கு சென்ற அவர் அங்கு தனது கைத்தொலைபேசி மூலம் படம் எடுத்தார் எனக் குற்றம் சாட்டி பலாலிப் பொலீஸாரால் மல்லாகம் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் திருமதி.ச.இளங்கோவன் உத்தரவிட்டார். (அ-1)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.11

தீவக வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை ஆசிரியர் நிலையத் தில் நடைபெறவுள்ளது என்று தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் எ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (203)

## குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவேண்டும்

### பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.11

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து குடாநாடு முழுவதும் 'டெங்கு' நோய் தீவிரமாகப் பரவும் அபாயம் உள்ளது. எனவே சகல இடங்களிலும் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் குடாநாட்டிலுள்ள நிறுவனங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற பொது அமைப்புகளுக்கு அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

அந்த அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாவட்டத்தில் யாழ். மாநகர சபையிலும் சுன்னாகம் நகரப் பகுதியிலும் டெங்கு காய்ச்சல் நோய் பரவியிருப்பது இனங்காணப்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இரு குழந்தைகள் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சகலரது ஒத்துழைப்பும் அவசியம். டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படவேண்டும். அதன் மூலமே யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

சிரமதானம், விழிப்புணர்வுச் செயற்பாடுகள், நுளம்பு வலைகள் பாவித்தல் போன்றவை செயற்படுத்தப்படவேண்டும். (202)

## எமது மனதைப் பற்றிச் சிந்திப்போம்!

உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது அவ்வளவு பிரச்சினையாக இல்லாவிட்டாலும், எனது மனதை உன்னத நிலையில் வைத்திருப்பதற்கு விடா முயற்சியும் ஆண்டவனின் கிருபையும் தேவை. நாம் இருக்கும் நிலை எதுவானாலும் அதற்கு மனமே காரணம்.

மனம் என்றால் என்ன? அது ஒரு சூக்சும நிலையானது. அது எண்ணங்களின் கூட்டென்றும், ஆசைகளின் கூட்டென்றும் ஆத்மாவின் பிரதிபலிப்பென்றும் விளக்கப்பட்டுள்ளது. மனம் உலகிலுள்ள எல்லாச் சக்திகளுக்கும் மேலானது, மனம் உறங்கினால் (ஆழ்ந்த நித்திரை) உலகமே இல்லை. கனவு நிலையில் எதை எதையோ படைத்து அனுபவிக்கிறது. இடம்விட்டு இடம் பாய்வதில், மனதின் வேகம் ஒளியின் வேகத்தை விட பன்மடங்கு அதிகமாகும். மனோ சக்தியினால் எதையும் சாதிக்கலாம். ஞானிகள் பஞ்ச பூதங்களைக்கூட மனோவலிமையால் கட்டுப்படுத்தி உள்ளார்கள். சுருங்கக் கூறின் மனம்தான் எல்லாவற்றிற்கும் காரணம். இப்படி சக்திவாய்ந்த மனம் எம்மைக் கீழ் நிலைக்கும் இழுத்துச் செல்லலாம். அல்லது உன்னதமான மேல் நிலைக்கும் எழுப்பி விடலாம்.



சாயி சிந்தனை

## 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் மகாஜனக் கல்லூரி இன்னிங்ஸ் வெற்றி

வலி.வடக்கு,ஒக்.11

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் இடையிலான போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50.4 ஓவர்களில் 234 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

மகாஜனக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய மேசிகீரன், ஜனாத்தன், ஜனார்த்தனன் ஆகியோர் முறையே 61, 47,

### விளையாட்டு

25 ஓட்டங்களைப் பெற்றனர்.

விக்னேஸ்வராக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கஜாகரன் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் ஆதவன், சிந்துரவீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி 22 ஓவர்களில் 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

விக்னேஸ்வராக் கல்லூரி சார்பில் கஜாகரன் ஆகக்கூடிய ஓட்டங்களாக 11 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்துவீசிய ஜனார்த்தன் 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் மேசீகரன், கஜந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸிலும் துடுப்பெடுத் தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி 30 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

விக்னேஸ்வராக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய கஜனன், கஜன் ஆகியோர் முறையே 20,15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய மேசீகரன் 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் ஜனார்த்தன் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் சஜீவன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

## வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்: கே.சி.சி.சி.அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.11

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 50 பந்துப் பரி மாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதல் சுற்றுப் போட்டிகளில் இரண்டாவது போட்டியில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் கடந்த 6ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 42 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியின் வீரர்களான சசி,தீபன், கோகுலன் ஆகியோர் முறையே 20, 22, 26 ஓட்டங்களைப் பெற்றனர். றொபேசன் 8 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். உமாநாத் 7 பந்துப் பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரதீபன் 10 பந்துப் பரிமாற்றங்களில் 36 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி விளையாட்டுக் கழக அணி 19.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 151 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டினால் வெற்றி பெற்றனர். பிரதீபன், சசிகரன், சி.மதுஸன் ஆகியோர் முறையே 28, 37, 61 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியில் கே.சி.சி.சி. வியைாட்டுக்கழக அணி கால் இறுதிப் போட்டியில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும். (50)



சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் சம்பியனான அராலி இந்துக் கல்லூரி அணிக்கும் 18 வயதுப் பிரிவில் சம்பியனான வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அணிக்கும் ஓய்வுபெற்ற தென்மராட்சிக் கல்விக் கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.லோகநாதன் வெற்றிக் கிண்ணங்களை வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள் :நேசன்)

## நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கி நடத்திய வலைபந்தாட்ட, கரபந்தாட்ட போட்டிகளில் பருத்தித்துறை மெதடிஸ், நெல்லியடி ம.வி.வெற்றி

உடுப்பிட்டி,ஒக்.10

ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடி கிளையினால் வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே அண்மையில் நடத்தப்பட்ட 'சிங்கிதி' கிண்ண துடுப்பாட்ட மற்றும் வலைப் பந்தாட்டப் போட்டிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் பருத்தித்துறை மெடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் சம்பியன்களாகின.

மென்பந்து கிரிக்கட் போட்டியில் 15 பாடசாலைகள் பங்குபற்றின. இவற்றில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சம்பியனானது.

வலைப்பந்தாட்டப் போட்டியில் 13 பாடசாலைகள் பங்குபற்றின. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை சம்பியனானது.

மென்பந்து கிரிக்கட் போட்டியில் 2ஆம் இடத்தை கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரியும், வலைப்பந்தாட்டப் போட்டியில் 2ஆம் இடத்தை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியும் பெற்றன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொண்டு வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு கேடயங்களையும் பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கிக் கௌரவித்தார். (50-155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்தல்

### திருமதி சரஸ்வதி சம்பந்த்சரணாலயம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வவுனியாவை வாழ்விடமாகக் கொண்டவருமான யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முதல்வர் ச.சிவநேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சரஸ்வதி சம்பந்த சரணாலயம் அவர்கள் காலமாகிய செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.


எதிர்பாராத வகையில் திடீரென ஏற்பட்ட இவரது இழப்பினால் துயரமடைந்துள்ள எமது நண்பனதும் அவர்தம் குடும்பத்தவர்களினதும் துயரத்தில் நாமும் பங்குகொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நண்பர்கள் *(அதிபர்கள்).*

(66749)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

ஆதி 07 . 08 . 1937



அந்தம் 11 . 09 . 2007

### அமரர் கதிரவேலு குணம்

எங்கள் குல விளக்கே! நீங்கள் மறைந்து
ஒளி விளக்காய் ஒளிர ஆரம்பித்து
ஒரு மாதமாகிவிட்டதா!! நம்பமுடியவில்லை
உங்கள் நிழலில் நாம் வாழ்ந்தோம் - இனி
உங்கள் ஒளியிலில் தான் வாழ்வோம்.

*கடந்த 11.09.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த அனைத்து நண்பர்கள், உறவினர்கள், நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், இன்று (11.10.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நன்றிகளுடன்:
**குடும்பத்தினர்.**

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு.* (66747)

## இதய அஞ்சலி



தாவடியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி,
சுன்னாகத்தை வசிப்பிடமாகவும்
தற்போது வவுனியாவில் வசித்தவருமான

### திருமதி சரஸ்வதி சம்பந்தசரணாலயம்

அவர்கள் 06.10.2007 சனிக்கிழமை அன்று வவுனியாவில் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சகோதரிகள்:*
செல்லத்துரை அன்னம்மா குடும்பம்,
இராசநாயகம் பொன்னாபரணம்
(சின்னக்கிளி) குடும்பம்,
செல்லத்துரை செல்வராஜா *(பெறாமகன்).*

*நெல்லொருபாதிப்*
*பிள்ளையார் கோயிலடி,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*
(66745)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வையகத்துள் 28 ✱ 12 ✱ 1924



தெய்வீகத்துள் 11 ✱ 09 ✱ 2007

### குணரெத்தினம் கனகரெத்தினம்

*(ஓய்வுபெற்ற தபாலதிபர்)*

அன்பான எமதருமை பப்பாவே!
நின் மறைவால் ஏங்கியே நாம் நிற்கின்றோம்
இன்றோடு மாதமொன்று ஏகிவிட்ட போதும்
முன்பாக நீர் உலாவும் காட்சி எங்கும் தெரிகிறதே!
இன்பமான நல்வாழ்வில் எப்போதும் துய்க்கவே
அன்பான பிள்ளைகள் நாம்
எப்போதும் இறைவனை வேண்டுகின்றோம்.

நின் பிரிவால் ஏங்கித் தவிக்கும்:
பிள்ளைகள்; மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன் மற்றும் உறவினர்.

*30, ஒடை ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (66728)

## நவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஆதரவில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நவராத்திரி பூசை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி விஜயதசமி அன்று காலை 9.30 மணிக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று கூறப்பட்டுள்ளது. (203)

✱ ✱ ✱

சுழிபுரம்,ஒக்.11

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் நவராத்திரி கும்பபூசை, அம்பாள் கொலுக் காட்சி, பூசை வழிபாடுகள், கூட்டுப்பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகள் தினமும் நடைபெறவுள்ளன. (203-28)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,ஒக்.11

நவராத்திரி விரதத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் தினமும் காலை 8 மணிமுதல் அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசைகளும் மாலை 4.30 மணிக்கு கொலுப் பூசைகளும் நடைபெறும். (203)

## முதுமாணிக் கற்கைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் முதுகலைமாணி மற்றும் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

முதுகலைமாணி முதலாம் அரையாண்டுக்கான பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. (202)

## உலக தபால் தினத்தை மு[ன்]னிட்டு சிரமதானம்

நல்லூர்,ஒக்.11

உலக தபால் தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதம தபாலகத்தில் தபாலதிபர் எஸ். துரைசிங்கம் தலைமையில் சிரமதான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

தபாலக உத்தியோகத்தர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டு தபாலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (203-111)

## மாணவர்களுக்குச் சப்பாத்து வழங்கப்பட்டது

நாவற்குழி, ஒக்.11

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் தரம்-5 இற்குக் கீழ் கல்வி கற்கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 16 மாணவர்களுக்கு ஆசிரியர் தினத்தன்று சப்பாத்துகளும் காலுறைகளும் வழங்கப்பட்டன.

நலன் விரும்பி ஒருவர் சப்பாத்துகளையும் காலுறைகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (75)

## கால்நடை அபிவிருத்தி பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக்.11

குடாநாட்டில் கால்நடைகளுக்கான பிரத்தியேகச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவையை விரிவாக்கும் முகமாக புதிதாகப் பயிற்சிநெறி ஒன்றை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வட பிராந்திய அலுவலகம் நடத்தவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு பிராந்தியத்திற்குட்பட்ட பத்து கால்நடை வைத்திய பிரிவுகளிலிருந்தும் தலா இருவர் வீதம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஜி.சீ.ஈ.உயர்தரம், சாதாரண தரம் கற்ற 20-40 வயதிற்குட்பட்ட ஆண்களை தங்கள் பிரிவு அரச கால்நடை வைத்திய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)


### வீடு விற்பனைக்கு

நல்லூர் பின் வீதியில் 2¼ பரப்புக் காணியில் கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
*356, கோயில் வீதி, நல்லூர்.*
T.P.: 0776969065
(66746)

### வீடு விற்பனைக்கு

இல.387, நாவலர் வீதியில் உள்ள வீடு விற்பனைக்குண்டு.

*தொடர்புகளுக்கு:* [illegible]
[illegible]
(66804) T.P.:077 9590780



COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Off : 15, Sirambiyadi Lane, Jaffna
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna
T.P:- 021-222 8250,0777 222422

Diploma in Computerized Accounting...

Quick Book Premier + ACCPAC + MYOB

ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்
Weekend Days: 13/10/2007, 14/10/2007 10AM
Weekdays: 15/10/2007, 18/10/2007 02PM

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் சின்னட்டி இராசதுரை

தோற்றம் 19 ✱ 06 ✱ 1938

மறைவு 11 ✱ 09 ✱ 2007

*கடந்த 11.09.2007 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னட்டி இராசதுரை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு தமது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் அவர் சுகவீனமுற்றிருந்த வேளை உதவி புரிந்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆன்மா சாந்தியடைவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

*நிற்சாமம்,*
*சங்கானை.* (66701)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் சண்முகலிங்கம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகலிங்கம் 08.10.2007 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் புஸ்பலதா (நோர்வே), தரணிகா (ஜேர்மனி), சண்முகதாஸ் (கனடா), லோகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவபாலன் (நோர்வே), மகேசபாதம் (ஜேர்மனி), பிரியா (கனடா), ரஞ்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் தாரணி, தரன்யா, சுகன்யா, கலைப்பிரியா, தனப்பிரியா, லக்ஷாந், மதுமிதா, லக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் கோபாலசிங்கம், சத்தியதேவி, பத்மாவதி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), திலகவதி, சுந்தர்ராஜா, சிறீக்காந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

*இராமகிருஷ்ணா வீதி,*
*கோண்டாவில்.* (66732)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 ✱ 01 ✱ 1923



மறைவு 02 ✱ 10 ✱ 1997

### அமரர் நமசிவாயம் நடராசா

**திதி: பிரதமை**

பாசத்துடன் எமையெல்லாம் வளர்த்து
பாரினிலே சிறப்பாக வாழவைத்துவிட்டு
பாதி வழியினிலே போனீர்களே ஐயா!
நவராத்திரி நன்னாளில் வானுறையும்
தெய்வத்துடன் கலந்து பத்து ஆண்டுகள்
ஓடி மறைந்ததுவே ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நிதமும் வேண்டுகின்றோம்.

இன்று (11.10.2007) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

*'நிர்மலகிரி'*
*ஐயனார் கோயிலடி,*
*கல்வயல், சாவகச்சேரி.* (66741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமை மீறல்களை மதிப்பீடு செய்யும் மார்க்கம்

மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் தூதர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் சர்ச்சைக்குரிய இலங்கை விஜயம் ஆரம்பமாகி விட்டது. அந்த விஜயத்தின் பெறுபேறுகளை மனித உரிமைகளில் ஆர்வம் கொண்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச தரப்புகள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. மோசமான மனித உரிமை மீறல் கொடூரங்களில் மூழ்கிக் கிடக்கும் இலங்கையை அதிலிருந்து மீட்பதற்கு இந்த விஜயம் காத்திரமான முடிவுகளை வெளிப்படுத்துமா என்பதே அத்தரப்புகளின் காத்திருப்பு.

மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் மிக உயர் மட்ட - நடுநிலை - பிரதிநிதி இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இச்சமயத்தில் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கு இலங்கை கொடுத்திருக்கும் 'சாட்டையடி' யும் கவனிக்கத்தக்கது.

*"இலங்கையில் மனித உரிமை மீறல் மோசமாக இடம்பெறுவது குறித்து விமர்சிக்கும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் இவ்விடயத்தில் தனது விம்பத்தை ஒரு தடவை கண்ணாடியில் பார்த்துவிட்டுப் பேசவேண்டும். ஈராக்கில் ஆறுலட்சம் பேர் காணாமல் போயிருக்கிறார்கள். காஷ்மீரில் பத்தாயிரம் பேர்வரை மர்மமாக மறைந்துள்ளனர். இலங்கையில் ஆக ஆயிரத்து இருநூறுபேர் வரைதான் காணாமற் போயிருக்கிறார்கள் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் மனித உரிமை மீறல்கள் தவிர்க்கப்படமுடியாதவை"* - இப்படி இலங்கை அரசு கூறியிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் விவகாரங்களைக் கவனித்துக் கையாள்வதற்காக - நான்கு அமைச்சர்கள் உட்பட்ட - உயர்மட்டக் குழு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன் மாதம் அமைத்திருந்தார். அந்தக் குழுவின் முக்கிய பிரமுகரான அமைச்சர் ராஜித சேனாரத்னவே இப்படிக் கூறியிருக்கின்றார்.

இந்தக் குழு அரச தகவல் திணைக்களத்தில் - அதுவும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதுவர் இலங்கைக்கு விஜயம் செய்யும் சமயத்தில் - இவ்வாறு தெரிவித்திருப்பது அரசுத் தரப்பின் உள்நோக்கங்களை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாகும்.

மனித உரிமைகள் விடயங்களைக் கவனித்து, கண்காணித்து, காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கம் என்ற பெயரில் அமைக்கப்பட்ட அரச உயர்மட்டக்குழு, அந்த வேலையைச் செய்வதை விடுத்து, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் சிக்கிக் கிடக்கும் இலங்கை அரசுத் தரப்பை அதிலிருந்து காப்பாற்றும் - காபந்து பண்ணும் - முயற்சியில் இறங்கியிருப்பது, இக்குழுவின் மீதான நம்பகத்தன்மையை முற்றாகச் சிதறடிக்க வைத்துவிட்டது.

அதேசமயம், சர்வதேசத்தில் இடம்பெறும் - அல்லது இடம்பெறுபவை என்று கூறப்படும் - மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி,தனது தேசத்தின் மோசமான மனித உரிமை மீறல்களை இலங்கை நியாயப்படுத்த முயல்வது சுத்த அபத்தமாகும்.

ஈராக்கில் பல லட்சம்பேர் காணாமற்போயிருக்கலாம். காஷ்மீரில் பல ஆயிரம் பேர் காணாமற் போகச் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் அதுபோன்ற மோசமான நிலைமை, இலங்கையில் வகைதொகையின்றி தமிழர்களைக் கைதுசெய்யவும், மர்மமான முறையில் மக்களைக் கடத்திக் காணாமல் போகச் செய்யவும், அச்சுறுத்திக் கப்பம் அறவிடவும் இதுபோன்ற இன்னோரன்ன கொடூர மனித உரிமை மீறல்களை மோசமாகக் கட்டவிழ்த்து விடவும் இறைமையுள்ள - சட்டரீதியான - அரசு என்று தனக்குத் தானே சுயநாமம் சூட்டிக் கொண்டுள்ள இலங்கைக்கு 'சர்வதேச லைசென்ஸை' வழங்கியதாகி விடாது.

இலங்கையில் அரசுத் தரப்பின் தவறான வழிகாட்டலைப் பின்பற்றி, தனது இலங்கை விஜயத்தின் சீரிய நோக்கத்தை சிதறடித்து விடாமல், உண்மையில் மனித உரிமை மீறல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தரப்புகளின் கவலையையும், கருத்துக்களையும் முழு அளவில் உள்வாங்கிக் கொள்வதில் அவர் சிரத்தையாக இருக்கவேண்டும் என்பதை பாதிக்கப்பட்ட சிறுபான்மையினத்தவர்களின் சார்பில் அவரது கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

ஏற்கனவே வெலிக்கடை உயர் பாதுகாப்பு சிறைச்சாலை, நியூமகஸின் சிறைச்சாலை, அநுராதபுரம் சிறைச்சாலை போன்றவற்றில் நீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தங்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல் கொடூரத்தை நேரில் வந்து பார்த்துச் செல்லுங்கள் என்ற கோரிக்கையை ஆர்பர் அம்மையாருக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்புக்கும் நேரடியாக வந்து, இலங்கை அரசுத் தரப்பினால் தமிழர் தாயகத்தின் மீது மோசமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல்களையும் அவற்றின் கொடூரப் பாதிப்புகளையும் நேரில் மதிப்பிட்டுச் செல்லுங்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமை விவகாரங்களுக்கான பேச்சாளர் என். செல்வி அழைப்பு ஒன்றை ஆர்பர் அம்மையாருக்கு முன்வைத்திருக்கின்றார்.

ஆழப் புரையோடி பெரும் புற்றுநோயாக இலங்கைத் தீவைப் பற்றிப் பிடித்திருக்கும் இந்த மனித உரிமை மீறல் கொடூரங்களை மதிப்பிட்டு, செம்மையாக அளவிடுவதாயின் அதற்கு இரண்டு முக்கிய அம்சங்களை ஆர்பர் அம்மையார் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒன்று - ஏற்கனவே இலங்கை நிலைமை தொடர்பாக நம்பகத்தன்மை மிகுந்த ஆய்வு அறிக்கைகளையும் தகவல்களையும் வெளியிட்டுள்ள - சர்வதேச தரம் மிகுந்த - அமைப்புகளின் கருத்துகளையும் உள்வாங்கி, தனது நேரடி அவதானிப்புகளுடன் அவற்றை சரிபார்த்து ஒரு முடிவுக்கு ஆர்பர் அம்மையார் வரமுடியும்.

இதற்கு, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், லண்டனில் இருந்து இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, ஹொங்கொங்கிலிருந்து இயங்கும் ஆசிய மனித உரிமைகள் அமைப்பு மற்றும் சர்வதேச ஜூரர் சபை, பத்திரிகையாளர்களுக்கான சர்வதேச அமைப்பு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி விசாரிக்கும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச பிரமுகர்கள் குழு, அவசரகால மனித நேயப் பணிகளுக்கான ஐ.நாவின் உதவிச் செயலாளர் சேர் ஜோன் ஹோம்ஸ் போன்ற தரப்புகள் இலங்கை நிலைமை குறித்து அவ்வப்போது வெளியிட்ட அவதானிப்பு அறிக்கைகள் ஆர்பர் அம்மையாருக்கு நிச்சயம் உதவும்.

அடுத்தது - ஐ.நா. உயர்மட்டப் பிரமுகர்களின் ஓரிருநாள் விஜயங்கள் மூலம் - அதுவும் இவ்விவகாரத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் இலங்கை அரசுத் தரப்பின் வழிகாட்டல் மற்றும் வழிப்படுத்தலுக்கு அமைவான குறுகிய கால சுற்றுலாக்கள் மூலம் - நிலைமையின் மோசத்தை ஆய்ந்து அறிந்துவிட முடியாது என்ற உண்மையை உணர்ந்துகொண்டு, இவ்விடயங்களை இலங்கையில் நிரந்தரமாகத் தங்கியிருந்து, கவனித்து, கண்காணித்து, ஆராய்ந்து, விசாரித்து, அறிக்கையிடும் அதிகாரத்துடன் நிரந்தரக் கண்காணிப்பாளர்களை இலங்கையில் நிறுத்தவும் ஐ.நா. கட்டாயம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் தமது விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஆர்பர் அம்மையாரின் மேலான கவனத்துக்கு இவ்விடயங்கள் சமர்ப்பணம்.

# யாழ். பல்கலை. விரிவுரையாளர் கொலைக்கு மாணவர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியல் விரிவுரையாளர் ப. மகினனின் கொலையை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டித்துள்ளது.

ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழகத்தின் இக்கட்டான சூழ்நிலையின் மத்தியில் எமது கணித புள்ளிவிவரவியற்துறை விரிவுரையாளர் ப. மகினன் கொலை செய்யப்பட்டமை மனித நாகரிக எல்லைகளுக்கும், உரிமைகளுக்கும் அப்பாற்பட்ட செயலாகும்.

எமது பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவது எமது மாணவர்களுக்குமட்டுமன்றி தமிழ் சமூகத்திற்கே பெரும் இழப்பாகும். இந்த ஈவிரக்கமற்ற எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத செயலை மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. இச்செயலை புரிந்தவர்கள் எமது மக்களின் வாழ்க்கையை அவர்களது எதிர்காலத்தை சிந்திக்காமல் ஒட்டுமொத்த பல்கலைக்கழகத்தையே பாதிக்க வைத் துள்ளது.

இவ்வாறான கொலைகளுக்கான நியாயத்தை உரிய தரப்பினரிடமும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடமும் வேண்டி நிற்கின்றோம். விரிவுரையாளர் பி. மகினன் அவர்களின் இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு மாணவர் ஒன்றியம் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவிக்கின்றது - என்று உள்ளது. (அ)

## ஜூலை மாதம் வரை மின்பட்டியல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 11

குடாநாட்டு மின் பாவனையாளர்களுக்கு கடந்த ஜூலை மாதம் வரைக்குமான மின் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன. பட்டியல் கிடைக்காத பாவனையாளர்கள் மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகத்துடனோ, 021 222 2002, 060 221 2261 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்கள் பட்டியலில் உள்ள நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்தி மின் துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் நிலுவை கூடிய பாவனையாளர்களுக்கு மின் துண்டிப்புத் தொடர்பான அறிவித்தல் கடிதம் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்தார். (202)

## குடாக்கடலில் மீன் பிடிக்க அனுமதி

குருநகர், ஒக். 11

யாழ். குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு பாஷையூர் மற்றும் குருநகர் கடற்றொழிலாளர்கள் நேற்று படையினரால் அனுமதிக்கப்பட்டனர்.

கடற்றொழிலாளர் மீன்பிடிப்பதற்குரிய எல்லைகளைக் குறிக்கும் விதத்தில் படையினர் கொடிக்கம்பங்களை நிறுவியதைத் தொடர்ந்து, மீனவர்கள் குடாக்கடலில் அரியாலை, பூம்புகார் கடற்பகுதிவரை மட்டுமே சென்று தொழிலைச் செய்து திரும்பினர் என்று கடற்றொழிலாளர் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-51)

## சிறுவர் அரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான சிறுவர் அரங்கப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே. குரூஸ் கலந்துகொள்வார். (1-202)

# மன்னார் படைநகர்வு புலிகளால் முறியடிப்பு

மன்னார், ஒக். 11

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி ஒன்றை தாங்கள் முறியடித்திருக்கின்றனர் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கறுக்காய் குளம் ஒன்பதாம் கட்டைப் பாதையில் இந்த முன்னேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் மூன்று படையினர் உயிரிழந்திருக்கின்றனர் என்றும் மேலும் மூவர் காயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தமக்கு எந்த விதமான இழப்புகளும் ஏற்படவில்லை என்றும் புலிகள் கூறினர். (சி)

# காணாமல்போதல் சம்பவங்கள் திருகோணமலையில் அதிகரிப்பு

திருகோணமலை, ஒக். 11

திருகோணமலை மாவட்டத்தில் ஆள்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஒகஸ்ட் மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் போனோர் சம்பந்தமாக 12 முறைப்பாடுகள் கிடைத்தன எனவும் செப்ரெம்பர் மாதத்தில் அந்த எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதத்தில் நேற்றைய தினம் வரையில் 8 முறைப்பாடுகள் திருகோணமலை மனித உரிமைகள் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது. இதனால் திருகோணமலை மாவட்டத்தில் மக்கள் பெரிதும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (சி)

# ஜேர்மனி, பிரான்ஸ் அறிஞர்களுக்கு பௌதிகவியலுக்கான நோபல் பரிசு

பிரான்ஸின் அல்பேட் மற்றும் ஜேர்மனியின் பீற்றர் குருன்பேர்க் ஆகிய அறிஞர்கள், 2007ஆம் ஆண்டின் பௌதிகவியலுக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.கணனி, ஐ - பொட்ஸ் (i - pod) மற்றும் வேறு சில டிஜிற்றல் சாதனங்களில் பயன்படுத்தப்படும் சிறிய அளவுகொண்ட "ஹார்ட் டிரைவ்ஸ்"சை (Hard Drives) கண்டுபிடித்தமைக்காக இவ்விருவருக்கும் இப்பரிசு வழங்கப்படுவதாக சுவீடன் அக்கடமி நேற்று அறிவித்தது.



நேற்று புதன்கிழமை இரசாயனவியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப் பட்ட இருந்தது. இன்று வியாழக்கிழமை இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட உள்ளது.

அவற்றைத் தொடர்ந்து, இம்மாதம் 12ஆம், 15ஆம் திகதிகளில் அமைதி மற்றும் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்படும். (50)

# ஒரே நாளில் தந்தையும் மகனும் வவுனியாவில் சுட்டுக்கொலை

வவுனியா, ஒக். 11

வவுனியாவில் நேற்று தந்தையும் மகனும் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் வசித்துவந்தவர்களான ரவிச்சந்திரராஜா (வயது - 43), அவரது மகனான ரமணன் (வயது - 21) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

நேற்று நண்பகல் சுமார் 12 மணியளவில் வவுனியா பற்றைக்காடு என்ற பகுதியில் வைத்து ரமணன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது தந்தை ரவிச்சந்திரராஜா வவுனியா காத்தான் கோட்டம் குழுமாட்டுச் சந்திக்கு அருகில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார் என்று கூறப்பட்டது.

இவர்கள் இருவரும் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை நடத்திவந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்ட இவர்கள், போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் வசித்து வந்தனர் என்றும் கடந்த சில வ்ருடங்களாக வவுனியாவுக்கு வந்து வசித்தனர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் இவர்கள் நடத்தி வந்த சிகை அலங்கரிப்பு நிலையம் கடந்த மாதம் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் எரிக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்பட்டது. (சி)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 25 | ;வெள்ளிக்கிழமை 12.10.2007 |
| திதி : பிரதமை | பி.ப. 12.09 |
| நட்சத்திரம் : | சித்திரை பி.ப. 01.05 |
| சுபநேரம் | : 06.02 - 07.32 |
| ராகுகாலம் | : 10.32 - 12.02 |

## உண்ணாவிரத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஏ.பி.சி. ஆகிய பிரிவு சிறைக்கூடத்துக்கும் சிங்களவர்களுடன் சேர்த்து அடைக்கப்பட்டுள்ள 28 தமிழ்க் கைதிகளும் தத்தமது சிறைக்கூடங்களுக்குள் இருந்தவாறே உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

86 கைதிகள் உண்ணாநிலைப் போராட்டம் நடத்திவரும் இடத்துக்குச் செல்ல 28 பேருக்கும் சிறைக்காவலர்கள் அனுமதி மறுத்ததன் காரணமாகவே அவர்கள் தத்தமது அறைகளில் இருந்தவாறே போராட்டத்தை தொடர்கின்றனர்.

மொத்தமாக 114 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

தாக்கப்பட்டனர் கைதிகளால்

போராட்டத்தில் இருப்போரில் 16 பேர் கண் வருத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

சிறைக்கூடத்திற்குள் இருக்கும் மருந்து நிலையத்திற்கு அவர்களில் சிலர் நேற்றுக்காலை மருந்து எடுப்பதற்காக சென்றபோது, சிங்களக்கைதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்டபோது, சிறை அலுவலர் ஒருவர் அங்கு இருந்தார் என்றும், அவரும் சேர்ந்தே இந்தத் தாக்குதலை நடத்தினார் எனவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

"புலிப்பயங்கரவாதிகள் உண்ணாவிரதப் போராட்டமா மேற்கொள்கிறீர்கள்?" என்று கூறியே சிங்களவர்கள் தாக்குதல் நடத்தினர் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, உண்ணாவிரதம் இருந்த சிறைக்கைதிகள் சிறைச்சாலை நிர்வாகத்திடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

சிறைச்சாலைக்கு வந்து தமது மகஜரைப் பெற்று சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது ஐ.சி.ஆர்.சி. ஆவன செய்யவேண்டும் என்றும் கைதிகள் கோரியிருக்கின்றனர். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை மீறல்களைச் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான தூது ... லூயிஸ் ஆர்பர் அம்மையாரிடம் தமிழர் தரப்பைப் பிரதிநிதித்துவம் செய்யும் தூதுக் குழு மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஆர்பர் அம்மையாரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மேலக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் கொண்ட ஐவர் கொண்ட தூதுக் குழு நேற்றுச் சந்தித்துப் பேசியது. கொழும்பில், பௌத்தாலோக மாவத்தையில் உள்ள ஐ.நா. தூதரக அலுவலகத்தில் நேற்றுமாலை இச்சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் மேலக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், என்.குமரகுருபரன் ஆகியோர் தூதுக்குழுவில் அங்கம் வகித்தனர்.

வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல் சம்பவங்களை தூதுக்குழுவினர் அம்மையாருக்கு விலாவாரியாக எடுத்து விளக்கினர்.

தூதுக்குழுவினர் ஐ.நா. தூதுவரிடம் எடுத்துரைத்தவையாவது:-

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற வகையில் அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. அந்தச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இராணுவ நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

**கிழக்கைச் சிங்கள மயமாக்குவதில் மும்முரம்**

இராணுவ நடவடிக்கைகள் மூலம், தான் மீட்டதாகக் கூறும் கிழக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்கும் நடவடிக்கையில் அரசு மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தமிழ் மக்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்து, அதனை அதீத முனைப்புடன் அரசு செயற்படுத்தி வருகின்றது.

வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி கொழும் பிலும் ஆள்கடத்தல், கொலைகள், கப்பம் கோரல், கைதுகள், அச்சுறுத்தல் போன்ற மனித உரிமை மீறும் செயல்கள் பெருமளவில் தமிழ் மக்கள் மீது கர்ண கொடூரமாகக் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்தச் செயல்களின் பின்னணியில் இராணுவமு... ...குகளுமே சம்பந்தப்பட்டுள்ளன.

தமிழ்க் கைதிகள் ... வாடுகின்றனர். அவர்கள் தொடர்பான வழக்குகள் விசாரணைகள் இழுபறிக் கிடக்கின்றன. கைதிகளை விடுவிக்க அரசு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை.

மொத்தத்தில், மலிந்துபோயுள்ள மனித உரிமை மீறல் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு இலங்கை அரசு உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு முற்றாக அற்றுப்போய்விட்டது. எனவே, இன்று நாட்டில் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவேண்டுமானால், அவற்றைக் கண்காணிக்கவும் விசாரணை செய்யவும் ஐ.நாவின் கண்காணிப்பகம் ஒன்று இங்கு செயற்படவேண்டும். அத்தகைய அமைப்பு ஒன்றின் மூலமே இங்கு மனித உரிமை மீறல்களைக் குறைக்க முடியும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இப்படிக் குழுவினர் எடுத்து விளக்கினர்.


குழுவின் கருத்தைக் கேட்டறிந்த ஆர்பர் அம்மையார், இலங்கையில் ஐ.நா. அமைப்பு செயற்படுவது தொடர்பாக ஜனாதிபதியுடன் தாம் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்தார். (அ-1)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் போன்றன நிறுத்தப்படுவதாகத் தெரிவித்து, தற்போதைய ஜனாதிபதியின் செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாக வும், அதனைத் தொடர்ந்து அந்த வசதிகள் யாவும் நிறுத்தப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்து அதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 11.09.2007 செவ்வாய்க்கிழமை முருகனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் அரியகுட்டி நாகராஜா

(கிருஸ்ணா சைக்கிள் கடை, கொக்குவில் சந்தி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 ★ 02 ★ 1939 | 11 ★ 09 ★ 2007 |

**அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு துயர்பகிர்ந்தோருக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பலவழிகளில் உதவிபுரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு,**

**அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (11.10.2007) வியாழக்கிழமை முற்பகல்11 மணியவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.**

*'விஷ்ணுபதி',*
*சிவகுரு ஒழுங்கை,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(66838)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை



### பொன்னையா மகினன்

(சிரேஷ்டவிரிவுரையாளர், கணித புள்ளி விபரவியற்றுறை - யாழ். பல்கலைக்கழகம்)

கணிதத்தின் தூணொன்று சரிந்தசேதி
காதோடு கேட்டோமே!கனவாய்போகாதோ?-யாழ்
வளாகத்து விரிவுரையை கால் நூற்றாண்டாய்
நெறிசெய்த நல்லாசான்-நீர்
ஆரவாரமின்றி எம்துறைத் தலைவராய் -போதனை
செய்த காலமதை ஞாலத்தில் மறக்கிலோமே நாம்.

அமரர் மகினன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வி சார்ந்த, சார ஊழியர்கள், கணித புள்ளி விபரவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(66938)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கும் லூயிஸ் ஆர்பர் அம்மையார் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட உணர்வு பூர்வமான மற்றும் அதிமுக்கியத்துவமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான தரவுகள் விடுதலைப் புலிகளிடம் உள்ளன.

மூன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மதகுருமார்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகள் கூட இராணுவத்தினரால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

பொது மக்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், சுகாதார சேவைப் பணியாளர்கள் ஆகியோரை தமது ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினர் மூலமும் எறிகணைத் தாக்குதல்கள் மூலமும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் படுகொலை செய்துள்ளனர்.

தொடர்ச்சியான எறிகணை மற்றும் வான் குண்டுத் தாக்குதல்களால் பாடசாலைச் சிறார்கள் பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஸ்ரீலங்காவினது திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளால் தமிழ் மக்களினது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தற்போது வருகை தந்த லூயிஸ் ஆர்பர் அம்மையார் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கூறினார். (அ-சி)

## குடாநாட்டு நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரதிநிதிகளையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. அதன் பின்னர் -

ஆள்கடத்தல், கொலைகள், உயிர் அச்சுறுத்தல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும் அங்குவைத்து ஆர்பர் அம்மையார் சந்திக்கவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ-1)

## விடுதலைப் புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிரும்பினேன். அவர்களுடன் பல விடயங்கள் குறித்துப் பேசவேண்டும் என்று இருந்தேன். முக்கிய சில விடயங்களை அவர்களுக்குத் தெளிவாக்க வேண்டும் என்றும் நினைத்திருந்தேன். ஆனால், துரதிஷ்டவசமாக அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விட்டது - என்று அவர் கவலை தெரிவித்தார். (அ-1)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க.பொ.த. (உ/த) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக கொழும்பு வந்து வெள்ளவத்தையில் தனியார் விடுதியில் தங்கியிருந்த விரிவுரையாளர் மகினனுக்கு என்ன நடந்தது எனத் தெரியாததால் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே, திங்களன்று மீட்கப்பட்ட சடலம் குறித்து பம்பலப்பிட்டிப் பொலிஸார் தகவல் வெளியிட்டனர். யாழ்ப்பாணத்தில் உள்ள காணாமற்போன மகினன் குடும்பத்தாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரது மனைவி நேற்று தனது கணவனின் சடலத்தை அடையாளம் காட்டினார்.

சடலம் கரையொதுங்கிய நாளன்றே அது விரிவுரையாளரின் சடலம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டபோதிலும் அதனை உறுதிப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. இது கொலையா, தற்கொலையா, விபத்தா அல்லது இயற்கை மரணமா என்பதில் தொடர்ந்தும் மர்மம் நீடிப்பதாக தகவல்கள் கூறுகின்றன. உறுதியான தகவல்கள் எவையும் நேற்று மாலை வரை கிடைக்கப்பெறவில்லை. (அ-சி)


தரம் - 4
புலமைப்பரிசில்
பரீட்சை - 2008
திரு. அன்பழகன்
ஆரம்பம்:12.10.2007
வெள்ளி,சனி.
ஐடியல்

THE SCIENCE COURSE
Clock Tower Lane, Jaffna
A/L 2008
PHYSICS
சடமும் கதிர்ப்பும்
ஆரம்பம் : 13.10.2007
சனி, ஞாயிறு
காலை :- 6:00 - 7:30

பூங்கன்றுகள் விற்பனை
குறோட்டன், செவ்வரத்தை, றேசினா, அஸ்பரஸ், தொரந்தா, மினிஎக்ஸ்சோறா (வெள்ளை, சிவப்பு, பிங்), போகன்வில்லா ஆகிய பூங்கன்றுகள் விற்பனைக்குண்டு.
Green Park
152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.


## இறைமையைக் கூறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு, ஏனைய விடயங்களான ஜனநாயகம், சுயநிர்ணய உரிமை போன்றவற்றை ஒதுக்கித்தள்ள இந்த அரசு முற்படுகிறது.

சர்வதேச சமவாயத்தில் இந்த அரசு நேர்மையுடன் செயற்படவில்லை. கபடத்துடனேயே செயற்பட்டு வருகின்றது.

சர்வதேச சமவாயத்தில் சுயநிர்ணயம் போன்றவற்றுக்கு முக்கிய இடம் உண்டு. இப்போது இந்த சமவாயத்துடன் இணைந்திருக்கும் அரசு சுயநிர்ணயம் தொடர்பாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்.

இந்த விடயங்களில் அரசு சர்வதேச சமவாயத்தில் இருந்து நழுவி விடவே பார்க்கின்றது. இந்தக் கபடத்தனம் சர்வதேச நாடுகளுக்கு நன்கு தெரியும். இந்த அரசிற்கு இறைமை என்று ஒன்று உள்ளது என்று இந்த அரசு கூறிக்கொண்டு அந்த இறைமையைக் கொண்டே தமிழ் மக்களை நசுக்க முற்படுகிறது.

தமிழ் மக்களின் உரிமைகளை இவ்வாறு நசுக்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (சி)

## ஆள்கடத்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாதன், அருட்திரு.எஸ்.ஜெ. ஜெயக்குமார், அருட்திரு. எஸ். ஜெயசேகரம், கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் எஸ்.தவரத்தினம் ஆகியோர் அப்போது மக்கள் குழுப் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

★ நகரப் பகுதியில் மக்கள் போக்குவரத்தைச் சீராக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். வேம்படி வீதி, ஸ்ரான்லி வீதி ஆகியவற்றின் ஊடான மக்கள் போக்குவரத்தை மக்கள் சிரமப்படாதிருக்கும் விதத்தில் சீராக்கவேண்டும்.

★ விசேட அடையாள அட்டை பெறுவதற்கு மாறுபட்ட நடைமுறைகள் ஒவ்வோர் இடத்திலும் கடைப்பிடிக்கப்படுகின்றன. சகல இடங்களிலும் ஒரே நடைமுறையைப் பேண ஏற்பாடு செய்யவேண்டும்.

★ வெளிமாவட்டங்களுக்கு மக்கள் பயணம் செய்வதற்கான பயண அனுமதியைப் பெறுவதில் உள்ள சிரமங்களை நீக்கி, நடைமுறை குறித்து விளக்கத்தை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விக்ரோறியா ஸ்ரனிஸ்லஸ் (லில்லி)

(ஓய்வுபெற்ற உப அதிபர், சென். அன்ரனிஸ் மகளிர் பாடசாலை - பாசையூர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விக்ரோறியா ஸ்ரனிஸ்லஸ் (லில்லி) நேற்று (10.10.2007) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுத்தின் ஞானப்பிரகாசம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிலிப்ஸ் ரனிஸ்லஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற டெய்சி பிரான்சிஸ்கா சூசைப்பிள்ளை மற்றும் அருட் தந்தை எட்மன் மைக்கல் (O.M.I) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளையின் அன்பு மைத்துனியும் இ.மேரிராணி (இந்தியா), சூ.இரவிச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் பெ.இம்மனுவேல் (பிரான்ஸ்), இ.சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஞானப்பிரதீபன், சு.தீபா, கி.சோபா, இ.ஜனார்தனி, இ.ருக்குமணி, இ.ஹேமா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (10.10.2007) புதன்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs.M.R.Emmanual,
304/1 Belly, Area,
Anna Nagar West,
Chennai 40,
India. 00914426161257.

தகவல்:
இ.மேரிராணி, மோ.அமலதாஸ்
35/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

### திருமதி சரவணை கற்பகம்

சுன்னாகம், செல்லவளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுன்னாகம் சந்தையில் சட்டி, பானை வியாபாரம் செய்யும் கற்பகம் ஆச்சி நேற்று (10.10.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணையின் அன்பு மனைவியும் வல்லிபுரம் - பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் தேவி, மலர், மணி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்லவளவு,*
*சுன்னாகம்.*

தகவல்:
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

### நல்லதம்பி கனகராசா

(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா ஊழியர் - வவுனியா)



தையிட்டிப்புலம் தெல்லிப்பழையைப் பிறப் பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாக வும் கொண்ட நல்லதம்பி கனகராசா 09.10.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இளையபிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நாசகம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசிந்தாவின் (பிரதேச சபை, சுழிபுரம்) அன்புக் கணவரும் சியாமளா, யுகதர்சினி, நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற தவராசா, இரத்தினேஸ்வரி, செல் வராசா, காலஞ்சென்ற சிவராசா, நகுலேஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org